மாலை மலர்

திருச்சி 20-12-2020 (ஞாயிற்றுக்கிழமை)



பயிற்சி தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# பெண்களுக்கான ஆயத்த ஆடை இலவச தையல் பயிற்சி தொடக்கம்

கரூர், டிச.20—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில் கரூர் மாவட்டம் புகளூர் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள காகிதபுரம், புகளூர், தோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நடுகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்குள் உள்ளடங்கிய கிராமங்களில் வசிக்கும் பெண்களுக்காக நேஷனல் ஸ்கில் டெவலப்மெண்ட் கார்ப்பரேசன் மற்றும் புதுடெல்லி ஹோம் பர்னிஷிங் செக்டார் ஸ்கில் கவுன்சில், கிரீன்வே இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்கில் பிரைவேட் லிமிடெட் சார்பில் ஆயத்த ஆடை இலவச தையல் பயிற்சி டி.என்.பி.எல். ஸ்டாப் கிளப் பில் தொடங்கியது.

சுமார் 44 நாட்கள் நடைபெற உள்ள இப்பயிற்சி வகுப்புகள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறுகிறது. இப்பயிற்சி முகாமில் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த வேலை வாய்ப்பற்ற பெண்கள் கலந்து கொண்டு பயன் பெறுகின்றனர்.

இப்பயிற்சியின் தொடக்க விழா நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல் – கருவியியல்) பாலசுப்பிரமணியன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜூ மற்றும் தமிழ்நாடு அப்பேரல் மேட்-அப்ஸ் மற்றும் ஹோம் பர்னிஷிங் செக்டார் ஸ்கில் கவுன்சில் ஸ்ரீதர், கிரீன்வே இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்கில் பிரைவேட் லிமிடெட் இயக்குனர் அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி இப்பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தனர். கரூர், அட்லஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் சார்பில் சசிக்குமார், ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி (20.12.2020)

## தமிழ்நாடு காகித நிறுவனம் சார்பில்

# பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி

கரூர், டிச.20-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள காகிதபுரம், புகளூர், தோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உள்ளடங்கிய கிராமங்களில் வசிக்கும் பெண்களுக்காக நேஷனல் ஸ்கில் டெவலப்மெண்ட் கார்ப்பரேசன், அப்பரெல் மேட்-அப்ஸ் மற்றும் ஹோம் பர்னிஸ்ஸிங் செக்டார் ஸ்கில் கவுன்சில், புதுடெல்லி மற்றும் கிரீன்வே இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்கில் பிரைவேட் லிமிடெட்., திருப்பூருடன் இணைந்து ஆயத்த ஆடை இலவச தையல் பயிற்சி நேற்றுமுன்தினம் டி.என்.பி.எல். ஸ்டாப் கிளப்பில் தொடங்கியது. சுமார் 44 நாட்கள் நடைபெற உள்ள இப்பயிற்சி வகுப்புகள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற இருக்கிறது. இப்பயிற்சி முகாமில் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற இருக்கின்றனர்.

இப்பயிற்சியின் துவக்க விழா நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல் - கருவியியல்) பால சுப்பிரமணியன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராஜூ மற்றும் தெற்கு மண்டல பொறுப்பாளர், தமிழ்நாடு அப்பரெல் மேட்-அப்ஸ் மற்றும் ஹோம் பர்னிஸ்ஸிங் செக்டார் ஸ்கில் கவுன்சில் ஸ்ரீதர், கிரீன்வே இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்கில் பிரைவேட் லிமிடெட்., இயக்குனர், அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி இப்பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தனர். கரூர், அட்லஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் சார்பில் சசிக்குமார், ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.